# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:84** **தேதி:-18.12.2015**

## வெள்ள நிவாரணப் பணிகளில் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம்-2

அன்பு தோழர்களே,

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள தமிழக மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என தமிழ் மாநில சங்கத்தின் அறைகூவலை ஏற்று ஊழியர்கள் கொடுத்து வரும் நன்கொடைகளை கொண்டு தமிழ் மாநில சங்கம் தொடர்ந்து அந்த நிவாரணப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

கடந்த வெள்ளத்தின் போது பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டம் பெரிய காட்டுப்பாளையம், விசூர், காடாம்புலியூர் உள்ளிட்ட கிராமங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள பொருட்களை வழங்கியதை முன்னரே தெரிவித்திருந்தோம்.

இந்த மழை வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த விழுப்புரம் மாவட்டம் அரசூர், T.குமாரமங்கலம் மற்றும் நல்லாலங்குப்பம் ஆகிய பகுதிகளுக்கு தமிழ் மாநில சங்கத்தின் சார்பில் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், தோழர் K.சீனிவாசன் மாநில பொருளாளர், தோழர் A.அண்ணாமலை COS, தோழர் K.V.சிவகுமரன் DS CGM(O), தோழர் K.T.சம்பந்தம் DS CDL, தோழர் S.அன்புமணி DP CGM(O), தோழர் R.V.ஜெயராமன் ADS CDL உள்ளிட்ட தோழர்கள் சென்றனர். அந்த கிராமங்களில் உள்ள சுமார் 350க்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள பாய், பெட்ஷீட், அரிசி மற்றும் உணவு பொருட்களை நமது தோழர்கள் வழங்கினர்.

அன்று மாலை மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், தோழர் K.சீனிவாசன் மாநில பொருளாளர், தோழர் A.அண்ணாமலை COS, தோழர் A.சுப்ரமணி DS Pondy, தோழர் A.சங்கரன் DP Pondy, தோழர் N.கொளஞ்சியப்பன், தோழர் K.V.சிவகுமரன் DS CGM(O), தோழர் K.T.சம்பந்தம் DS CDL தோழர் S.அன்புமணி DP CGM(O), தோழர் R.V.ஜெயராமன் ADS CDL உள்ளிட்ட தோழர்கள் கடலூர் மாவட்டத்திலுள்ள மலிக்கன் பட்டு என்கின்ற கிராமத்திற்கு சென்றனர். பாண்டிச்சேரி தோழர்கள் சேகரித்த ரூபாய் 35,000 மதிப்புள்ள அரிசி, பெட்ஷீட், மளிகை பொருட்கள் உள்ளிட்டவைகளை அந்த கிராமத்தில் உள்ள மக்களிடம் வழங்கினர்.

மனித நேயத்துடன் நிதியுதவி மற்றும் பொருளுதவி செய்த அனைத்து தோழர்களுக்கும் தமிழ் மாநில சங்கத்தின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**